**அலகு – 11**

## வேர்ச்சொல்லைக் கொடுத்து, வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற் பெயரை உருவாக்கல்

### வினைமுற்று

படித்தான், ஆடுகின்றாள், பறந்தது, சென்ற, கண்டு ஆகியவை செயலை அடிப்படையாகக் கொண்ட சொற்கள் ஆகும். செயலை வினை என்றும் குறிப்பர். இவ்வாறு ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

### வினைமுற்று

மலர்விழி எழுதினாள். கண்ணன் பாடுகிறான். மாடு மேயும்.

இத்தொடர்களில் எழுதினாள், பாடுகிறான், மேயும் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் பொருள் முழுமை பெற்று விளங்குகிறது. இவ்வாறு பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர். வினைமுற்று ஐந்து பால், மூன்று காலம், மூன்று இடம் ஆகிய அனைத்திலும் வரும்.

வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

### தெரிநிலை வினைமுற்று

ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும். இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

(எ.கா.) எழுதினாள்.

செய்பவர் – மாணவி
கருவி – தாளும் எழுதுகோலும்
நிலம் – பள்ளி
காலம் – இறந்தகாலம்
செய்பொருள் – கட்டுரை
செயல் – எழுதுதல்

## குறிப்பு வினைமுற்று

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

பொருள் – பொன்னன்

இடம் – தென்னாட்டார்

காலம் – ஆதிரையான்

சினை – கண்ணன்

பண்பு (குணம்) – கரியன்

தொழில் – எழுத்தன்

தெரிநிலை, குறிப்பு வினைமுற்றுகள் அன்றி ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று எனப் பிறவகை வினைமுற்றுகளும் தமிழில் உண்டு.

## ஏவல் வினைமுற்று

பாடம் படி.     கடைக்குப் போ.

இத்தொடர்கள் ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடுகின்றன. இவ்வாறு தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும். ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்.

(எ.கா.) எழுது – ஒருமை     எழுதுமின் – பன்மை

பன்மை ஏவல் வினைமுற்று எழுதுங்கள் என வருவது இக்கால வழக்கு.

## வியங்கோள் வினைமுற்று

வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும். இவ்வினைமுற்று இரு திணைகளையும் (உயர்திணை, அஃறிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும். இதன் விகுதிகள் க, இய, இயர், அல் என வரும்.

(எ.கா.) வாழ்க, ஒழிக, வாழியர்.

ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள்

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும். | இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். |
| ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. |
| கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். |
| விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | விகுதி பெற்றே வரும். |

1. விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று, தன்மை இடத்தில் வராது.
2. இயர், அல், ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளன.

**எச்சம்**

படித்தான், படித்த, படித்து – ஆகிய சொற்களைக் கவனியுங்கள்.

படித்தான் என்னும் சொல்லில் பொருள் முற்றுப் பெறுகிறது. எனவே, இது வினைமுற்று ஆகும்.

படித்த, படித்து ஆகிய சொற்களில் பொருள் முற்றுப்பெறவில்லை. இவ்வாறு பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும். இது பெயரெச்சம், வினையெச்சம் என்று இருவகைப்படும்.

**பெயரெச்சம்**

படித்த என்னும் சொல் மாணவன், மாணவி, பள்ளி, புத்தகம், ஆண்டு போன்ற பெயர்ச்சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

(எ.கா.) படித்த மாணவன்.

படித்த பள்ளி.

இவ்வாறு பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆகும். பெயரெச்சம் மூன்று காலத்திலும் வரும்.

(எ.கா.) பாடிய பாடல் – இறந்தகாலப் பெயரெச்சம்

பாடுகின்ற பாடல் – நிகழ்காலப் பெயரெச்சம்

பாடும் பாடல் – எதிர்காலப் பெயரெச்சம்

**தெரிநிலை, குறிப்புப் பெயரெச்சங்கள்**

எழுதிய கடிதம் – இத்தொடரில் உள்ள எழுதிய என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்தகாலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

சிறிய கடிதம் – இத்தொடரில் உள்ள சிறிய என்னும் சொல்லின் செயலையோ காலத்தையோ அறிய முடியவில்லை. பண்பினை மட்டும் குறிப்பாக அறியமுடிகிறது. இவ்வாறு செயலையோ காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

**வினையெச்சம்**

படித்து என்னும் சொல் முடித்தான், வியந்தாள், மகிழ்ந்தார் போன்ற வினைச் சொற்களுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

(எ.கா.) படித்து முடித்தான்.

படித்து வியந்தான்.

இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.

**தெரிநிலை, குறிப்பு வினையெச்சங்கள்**

எழுதி வந்தான் – இத்தொடரில் உள்ள எழுதி என்னும் சொல் எழுதுதல் என்னும் செயலையும் இறந்த காலத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. இவ்வாறு செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

மெல்ல வந்தான் – இத்தொடரில் உள்ள மெல்ல என்னும் சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டவில்லை. மெதுவாக என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது. இவ்வாறு காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்திவரும் வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

**முற்றெச்சம்**

வள்ளி படித்தனள்.

இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்தாள் என்னும் வினைமுற்றுப் பொருளைத் தருகிறது.

வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.

இத்தொடரில் படித்தனள் என்னும் சொல் படித்து என்னும் வினையெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப்பொருள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

**ஆக்கப்பெயர்கள்**

உலகிலுள்ள அனைத்துப்பொருள்களும் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன. முன்னோர்கள் சில பொருள்களுக்குக் காரணம் கருதியும் சில பொருள்களுக்குக்

காரணமின்றியும் பெயர் வைத்தனர். இலை, மண், கல், நாற்காலி, காற்றாடி எனப் பெயர்களை நினைவில் கொண்டுவரும்போது இவற்றுள் காரணத்தோடு வரும் பெயர்களை உணர்ந்துகொள்ள முடிகிறது. காலப்போக்கில் பொருளின் மாற்றத்தால் அவை பயன்படுத்தப்படும் நிலைமைக்கேற்றவாறு காரணப்பெயர்கள் சிலநேரங்களில் இடுகுறிப்பெயர்களாகி விடுகின்றன.

மரத்தால் செய்யப்பட்டுப் பின்புறம் சாய்ந்துகொள்ளவும் கைகளை வைத்துக்கொள்ள வசதியாகவும் நான்கு கால்களைக் கொண்ட இருக்கைக்கு நாற்காலி எனக் காரணம் கருதிப் பெயர் வைத்தனர்.

ஆனால்,இன்று நான்குகால்கள் இல்லாத இருக்கை சிலவற்றையும் நாற்காலி என்றே அழைக்கிறோம். ஒருகாலத்தில் காரணம் கருதி வழங்கப்பட்ட ஒரு பொருளுக்கான பெயர் இன்று இடுகுறியாக வழங்கப்படுகிறது.

காலச் சூழலுக்கேற்றவாறு நம் பயன்பாட்டிற்கெனப் பல்வேறு பெயர்களைப் புதியதாக ஆக்கிக்கொள்கிறோம். அவை இடுகுறியாகவும் இருக்கலாம்; காரணமாகவும் இருக்கலாம். இவ்வாறு, புதியதாக ஆக்கப்படும் சொல் ஆக்கப்பெயர் என அழைக்கப்படுகின்றது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது பழமொழி. இதில் ஆத்திரம் கொண்ட ஒருவனைக் குறிப்பிட காரன் என்னும் விகுதி சேர்த்து ஆத்திரக்காரன் என்னும் சொல்லை உருவாக்குகிறோம்.

பெயர் அல்லது வினைச்சொற்களுடன் விகுதிகளைச் சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச்சொற்கள் ஆக்கப் பெயர்கள் (Derivative noun) எனப்படும். இவ்வாறு பெயர்ச்சொற்களை ஆக்கப் பயன்படும் விகுதிகளை ஆக்கப்பெயர் விகுதிகள் என்பர்.

| தமிழில் ஆக்கப்பெயர் விகுதிகள் |
|---|
| காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம் |

ஆக்கப் பெயர்களில் விகுதிகளே தனிச்சிறப்பு உடையன. தமிழ்ச்சொற்களோடு இவ்வகையான விகுதிகள் சேரும்போது எண்ணற்ற புதுச்சொற்கள் உருவாகித்

தமிழின் சொற்களஞ்சியம் விரிவடைகின்றது. தமிழ்மொழியில் ஆக்கப்பெயர்கள் பேச்சு வழக்கிலேயே மிகுதியாக உள்ளன.

மலர்ந்த மலரைக்

கண்டு வாடினாள்

பூக்காரி

இத்துளிப்பாவில் பூ விற்கும் பெண், பூக்காரி என்று அழைக்கப்படுகிறார். மேலும், நெசவு செய்பவரை நெசவாளி/நெசவாளர் என்றும் உழைப்பவரை உழைப்பாளி/ உழைப்பாளர் என்றும் அழைக்கப்படுகிற ஆக்கப்பெயர்கள் இன்றும் வழக்கில் உள்ளன.

அறிவியல், திறமைசாலி, கோழைத்தனம், சமத்துவம், பெண்ணியம், பேச்சாளன், ஏற்றுமதி முதலான சொற்கள் ஆக்கப்பெயர்ச்சொற்களே என்பதை உணரவேண்டும். இச்சொற்களில் இயல், சாலி, தனம், துவம், இயம், ஆளன், மதி ஆகிய விகுதிகள் சேர்ந்து ஆக்கப் பெயராக்கப்பட்டுள்ளன.

ஆக்கப்பெயர்ச்சொற்களை ஈற்றில் நிற்கும் விகுதிகளைக் கொண்டு மூவகையாகப் பிரிக்கலாம். அவை

1. பெயருடன் சேரும் விகுதிகள்
2. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்
3. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்

**1. பெயருடன் சேரும் விகுதிகள் (காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர்)**

| | |
|---|---|
| பெயர் + விகுதி | = ஆக்கப்பெயர் |
| வண்டி + காரன் | = வண்டிக்காரன் |
| சமையல் + காரர் | = சமையல்காரர் |
| வேலை + காரி | = வேலைக்காரி |
| பணி + ஆள் | = பணியாள் |
| ஆணை + ஆளர் | = ஆணையாளர் |

| | |
|---|---|
| குற்றம் + ஆளி | = குற்றவாளி |
| விண்ணப்பம் + தாரர் | = விண்ணப்பதாரர் |

காரன், காரி, காரர் ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள் உடைமை, உரிமை, உறவு அல்லது தொடர்பு, தொழில் அல்லது ஆளுதல் என்னும் நான்கு பொருள்களில் வரும்.

| |
|---|
| வீடு + காரன் - வீட்டுக்காரன் – உடைமை<br>தமிழ்நாடு + காரி- தமிழ்நாட்டுக்காரி- உரிமை<br>உறவு + காரர்- உறவுக்காரர்- உறவு<br>தோட்டம் + காரர்- தோட்டக்காரர்- தொழில் |

தொழிற்பெயர் விகுதிகளுடன் 'ஆளர்' என்னும் ஆக்கப்பெயர் விகுதி சேர்ந்து சொற்கள் உருவாகின்றன.

| தொழிற்பெயர் விகுதி | தொழிற்பெயர் | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| சி | ஆட்சி | ஆட்சியாளர் |
| அல் | செயல் | செயலாளர் |
| தி | செய்தி | செய்தியாளர் |
| மதி | இறக்குமதி | இறக்குமதியாளர் |
| வை | பார்வை | பார்வையாளர் |
| வு | தேர்வு | தேர்வாளர் |
| பு | அழைப்பு | அழைப்பாளர் |

'ஆளர்' 'ஆளி' முதலான விகுதிகள் இருபாற்பொதுப்பெயர்களை உருவாக்கத் துணை நிற்கின்றன.

| ஆளர் |
|---|
| உதவி + ஆளர் = உதவியாளர் |
| காப்பு + ஆளர் = காப்பாளர் |

| |
|---|
| மேல் + ஆளர் = மேலாளர் |
| கண்காணிப்பு + ஆளர் = கண்காணிப்பாளர் |
| தயாரிப்பு + ஆளர் = தயாரிப்பாளர் |

| ஆளி |
|---|
| நெசவு + ஆளி = நெசவாளி |
| முதல் + ஆளி = முதலாளி |
| தொழில் + ஆளி = தொழிலாளி |
| பயன் + ஆளி = பயனாளி |
| கூட்டு + ஆளி = கூட்டாளி |

**2. வினையுடனும் எச்சத்துடனும் சேரும் விகுதிகள்**

வினையடியுடன் 'மானம்' என்னும் விகுதி சேர்ந்து புதிய சொற்கள் உருவாகின்றன.

| **வினை** | **விகுதி** | **ஆக்கப்பெயர்** |
|---|---|---|
| அடை | + மானம் | = அடைமானம் |
| கட்டு | + மானம் | = கட்டுமானம் |
| தேய் | + மானம் | = தேய்மானம் |

**3. பெயருடனும் வினையுடனும் சேரும் விகுதிகள்**

பெயருடன் சேர்ந்து வரும் விகுதிகள்.

| பெயர் | விகுதி | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| அச்சு | அகம் | அச்சகம் |

**வினையுடன் சேர்ந்து வரும் விகுதிகள்**

| வினை | விகுதி | ஆக்கப்பெயர் |
|---|---|---|
| பயில் | அகம் | பயிலகம் |

இவ்வாறு, தமிழில் எண்ணற்ற ஆக்கப் பெயர்ச்சொற்கள் விரவிக் கிடக்கின்றன. இவ்வகையான சொற்கள் நம் மொழிக்குப் புதிய புதிய சொற்களை உருவாக்குவதோடு நில்லாமல், மொழி காலந்தோறும் வளர்வதற்கும் துணைநிற்கின்றன.

**அகராதிக் கலை**

**கற்பனை உரையாடல்**

**இடம்:** சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

**உரையாடுவோர்:** அமுதா, அந்தோணி, அப்துல்லா இவர்களுடன் அகராதி

**அகராதி:** மாணாக்கர்களே! என்ன தேடுகிறீர்கள்?

**அமுதா:** எங்கிருந்து வருகிறது குரல்? (அமுதா, அந்தோணி, அப்துல்லா ஆகிய மூவரும் சுற்றும்முற்றும் பார்க்கின்றனர்).

**அகராதி:** நான்தான் அகராதி பேசுகிறேன். உங்களுக்கு என்ன வேண்டும்?

**அந்தோணி:** ஓ! பேசும் அகராதியா, மிக்க மகிழ்ச்சி. எங்களுக்குக் 'குவலயம்' என்னும் சொல்லுக்குப் பொருள் வேண்டும்.

**அகராதி:** குவலயம் என்றால் உலகம். வையம், ஞாலம், புவி, புவனம், அகிலம், அண்டம், பார், தரணி, பூமி ஆகிய சொற்களும் உலகம் என்னும் பொருளைத்தான் குறிக்கின்றன.

**அப்துல்லா:** அப்படியா! வியப்பாக உள்ளதே! உலகம் என்பதற்கு இத்தனை சொற்கள் இருக்கின்றனவா! அகராதியே! உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளோம். உன் தோற்றம் குறித்துச் சொல்வாயா?

**அகராதி:** ஓ! சொல்வேனே! அகரம், ஆதி என்னும் இரு சொற்களின் சேர்க்கையே நான். ஆதி என்பதற்கு முதல் என்னும் பொருளும் உண்டு.ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் அகர வரிசையில் அமையும்படி தொகுத்து விளக்கும் நூல்தான் நான். என்னை அகரமுதலி எனவும் கூறுவர்.

**அமுதா:** அகராதியே! அயல்நாட்டவர்தாம் உன்னைத் தமிழுக்கு அறிமுகம் செய்தனரா?

**அகராதி:** இல்லை! இல்லை! தமிழில் சொல்லுக்குச் சொல் பொருள் விளக்கம் செய்யும்முறை தொல்காப்பியர் காலத்திலேயே தொடங்கிவிட்டது. தொல்காப்பியர், உரியியலில் பல சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்துள்ளார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

**அந்தோணி:** அப்படியா! எங்களுக்குத் தெரியாதே. சரி, இதற்கு ஓர் எடுத்துக்காட்டைச் சொல்லேன்.

**அகராதி:** மா ணாக்கர்களே! தொல்காப்பியர்,

’செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்’

என்ற நூற்பா மூலம் எளிதாகப் பொருள் விளக்கம் தருகிறார். அஃதாவது, செழுமை என்பது, வளமையையும் கொழுப்பு என்னும் பண்பையும் குறித்து வரும். மற்றோர் எடுத்துக்காட்டும் கூறுகிறேன். கேளுங்கள். ’ஐ வியப்பாகும்’ என்பது ஒரு நூற்பா.

குழந்தைகள் வியப்பிற்குரிய பொருளைக் கண்டால் ’ஐ’யென ஒலி எழுப்புவது இயற்கையல்லவா? இந்த உரிச்சொல்லுக்குத்தான் தொல்காப்பியர் பொருள் விளக்கம் தருகிறார்.

**அப்துல்லா:** ஓ! அப்படியென்றால், தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லுக்குப் பொருள் காணும் செயல்பாடு தொடங்கிவிட்டது. சரி, அகராதி என்ற சொல் தமிழில் எப்பொழுது பயன்பாட்டிற்கு வந்தது?

**அகராதி:** தமிழில் முதன்முதலாக அகராதி என்ற சொல்லைப் பயன்படுத்திய நூல், 1594இல் எழுதப்பட்ட 'அகராதி நிகண்டு' என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் சிதம்பரத்தில் வாழ்ந்த இரேவணச்சித்தர் ஆவார்.

**அமுதா:** அப்படியா! ஆனால், 'நிகண்டு' என்று கூறினாயே? அந்தச் சொல்லுக்குப் பொருள் என்ன?

**அகராதி:** சொல்கிறேன். 'நிகண்டு என்பது, வடசொல். இச்சொல்லுக்குத் தமிழில் சொற்றொகை, தொகுப்பு அகராதி, தொகையகராதி, தமிழ்ப்பா அகராதி, தொகுதி, கூட்டம் எனப் பல பொருள்களுள்ளன. நிகண்டுகள், தமிழிலுள்ள சொற்களைப் பல்வேறு பகுப்புகளுக்குட்படுத்தி, அவற்றிற்குரிய பொருளைப் பாடல் வடிவில் தந்தன. முதலில் தோன்றிய நிகண்டு சேந்தன் திவாகரம். நிகண்டு நூல்களுள் சிறந்ததாகச் சூடாமணி நிகண்டைக் கூறுவர்.

**அமுதா:** நிகண்டு என்றால் என்னவென்று புரிந்துகொண்டோம். ஆனால், எனக்கோர் ஐயம். தமிழிலுள்ள சொற்களைப் பல்வேறு பகுப்புகளுக்கு உட்படுத்துதல் என்று கூறினாயே, அப்படி என்றால் என்ன?

**அகராதி:** சொல்கிறேன். தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம் முதலான பன்னிரு பெயர்த்தொகுதியில், தமிழிலுள்ள சொற்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாகச் சூடாமணி நிகண்டில், விலங்குகளின் இளமைப்பெயரை அறிய விரும்பினால், முதலில் விலங்கின் பெயர்த்தொகுதியைக் காண வேண்டும். பின்னர், விலங்கின் பிள்ளைமரபு என்னும் தலைப்பில் இடம்பெற்றிருக்கும் பல்வேறு விலங்குகளுக்குரிய இளமைப்பெயர்களைக் காணலாம். பறழ், பிள்ளை, குட்டி, குழவி, பார்ப்பு, குருளை, கன்று, மறி, போதகம் என்பனவெல்லாம் விலங்கின் இளமைப்பெயர்களே. அதுமட்டுமன்று, அப்பெயர்களுக்குரிய விலங்குகள் எவையெவை என்பதும் கொடுக்கப்பட்டிருக்கும்.

**அந்தோணி:** அடடே! இதுபோன்று ஒரு சொல்லுக்குரிய பல பெயரையும் அறிந்துகொண்டால், எங்கள் பேச்சிலும் எழுத்திலும் பல சொற்களைப் பயன்படுத்துவோம், அல்லவா?

**அகராதி:** உண்மைதான். சரியாகச் சொன்னீர்கள். உங்கள் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ள இதுவே சிறந்த வழி.

**அப்துல்லா:** அப்படியே செய்வோம். அண்மையில் பள்ளி சார்பாக எங்களைப் புத்தகக் கண்காட்சிக்கு அழைத்துச் சென்றனர். அங்குச் சதுரகராதி என்னும் பெயருடைய ஒரு நூலைப் பார்த்தோம். அதுவும் அகராதிதானோ?

**அகராதி:** ஆம். இந்தச் சதுரகராதியை உருவாக்கியவர் வீரமாமுனிவர். இவர், இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி. இவர் சதுரகராதியினை 1732ஆம் ஆண்டு தொகுத்தார். 'சதுர்' என்பதற்கு நான்கு என்பது பொருள். இந்நூலுள் பெயர், பொருள், தொகை, தொடை என்னும் வரிசைமுறையில் நான்காகப் பகுத்துச் சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்துள்ளார்.

**அமுதா:** வீரமாமுனிவரைப்போல அயல்நாட்டவர் வேறு யாரேனும் இப்பணியில் ஈடுபட்டனரா?

**அகராதி:** ஆம். வீரமாமுனிவரைப் பின்பற்றி ஐரோப்பியர் பலர் தமிழ் அகராதிகளை உருவாக்கியுள்ளனர். அவர்களுள் பெப்ரீசியஸ், இராட்லர், வின்சுலோ, பெர்சிவல், ஜியு. போப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**அந்தோணி:** இவர்கள் மட்டும்தான் அகராதியை உருவாக்கினார்களா?

**அகராதி:** இல்லை, இல்லை. நான் அப்படிக் கூறவில்லை. அயல்நாட்டவர் மட்டுமல்ல, தமிழர்களும் அகராதிகளைத் தொகுத்துள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பெற்ற தமிழ்ப்பேரகராதி (தமிழ் லெக்ஸிகன்) குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகராதியில், சொல்லுக்கான விளக்கங்கள் ஏழு கூறுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**அப்துல்லா:** அப்படியா? அவை என்னென்ன?

**அகராதி:** சொல்கிறேன். அவை, 1. சொல் 2. சொல்லின் ஆங்கில ஒலிபெயர்ப்பு 3. இலக்கணப் பாகுபாடு 4. சொல்லின் தோற்றம் 5. இனச்சொற்கள் 6. தமிழிலும், ஆங்கிலத்திலும் சொல்லுக்குரிய பொருள் 7. சொற்பொருளுக்கேற்ற இலக்கிய மேற்கோள்கள் என அமைந்திருக்கும். ஏழாவதாகக் கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள்

வாயிலாக, அந்தச்சொல் எந்தெந்த இலக்கியத்தில் என்னென்ன பொருள்களில் வந்துள்ளது என அறிந்துகொள்ளச் செய்வதும் இவ்வகராதியின் சிறப்பு.

**அந்தோணி:** ஒரே சமயத்தில் பல விவரங்களை அறிந்துகொள்ளலாம் போலிருக்கிறதே! அந்த அகராதியைப் பார்க்க விரும்புகிறோம்.

**அகராதி:** இந்த நூலகத்திலும் காணலாம். இது, ஆறு தொகுதிகளாக வெளியிடப்பெற்றுள்ளது.

**அப்துல்லா:** அகராதிகளையும் நிகண்டுகளையும் தெரிந்துகொண்டோம். இவையன்றி நாங்கள் பயன்படுத்துவதற்கு வேறு பார்வை நூல்கள் உள்ளனவா?

**அகராதி:** ஏன் இல்லை? கலைக் களஞ்சியங்கள் உள்ளனவே.

**அமுதா:** கலைக்களஞ்சியங்களா? அப்படி என்றால் என்ன?

**அகராதி:** 'செய்திகளைத் தொகுத்துத் தரும் பார்வை நூல்களைத்தான் கலைக்களஞ்சியம்' என்கிறோம். அறிஞர்கள், புலவர்கள், தலைவர்கள் ஆகியோர்தம் வரலாறுகள், தாவரங்கள், விலங்குகள் பற்றிய செய்திகள், புகழ்பெற்ற இடங்கள்,பொருள்கள்,நிகழ்ச்சிகள் தொடர்பான விவரங்கள் ஆகிய அனைத்துச் செய்திகளையும் உங்களுக்குத் தொகுத்துத் தரக்கூடிய நூல்கள் கலைக்களஞ்சியங்களே.

**அமுதா:** எங்கள் அறிவியல் ஆசிரியர், அறிவியல் கலைக்களஞ்சியம் என்ற நூலைப்பற்றிக் கூறியிருப்பது எனக்கு நினைவுக்கு வருகிறது.

**அகராதி:** ஆம். நான் ஏற்கெனவே கூறியதுபோல அறிவியல் தொடர்பான செய்திகளையெல்லாம் அந்தக் கலைக்களஞ்சியத்தில் நீங்கள் அறிந்து கொள்ளலாம். தமிழிலும் 'அபிதான சிந்தாமணி' என்ற கலைக்களஞ்சியம் உள்ளதே, உங்களுக்குத் தெரியுமா? இந்நூலில் புலவர்கள், பழம்பெரு இலக்கியங்கள், இலக்கியக் கதைமாந்தர்கள், கோவில்கள் ஆகியன பற்றிய விவரங்களும் செய்திகளும் நிறைந்துள்ளன.

**அமுதா:** தற்காலத்தில் கணினி பல துறைகளிலும் தடம் பதித்துள்ளது. அந்த வகையில் கணினித் துறையில் அகராதியின் பங்கு குறித்து அறிய விரும்புகிறோம்.

**அகராதி:** தமிழில் இன்று வெளிவந்துள்ள கணிப்பொறி மென்பொருள்கள் தம்முள் அகராதியினையும் கொண்டுள்ளன. கணினியில் தட்டச்சு செய்யும்போது, சரியான சொற்களுக்கான பரிந்துரைகளை இத்தகு அகராதிகள் தருகின்றன.

**அமுதா:** அகராதியே! இக்கால மக்களும் பண்டைய இலக்கிய இலக்கணங்களின் சொல்வளம், பொருளாழம் போன்றவற்றைத் தெளிவாக அறிந்து, சுவைத்து, மகிழத் துணை செய்வன அகரமுதலிகளே என்பதனை நன்கு உணர்ந்து கொண்டோம்.

அறிவியல் வளர்ச்சி எத்துணை விரைவாக இருந்தாலும் ஒரு மொழியின் உயிர், அதனைப் பேசும் மக்களிடத்தில்தான் உள்ளது என்பதையும் நன்றாகத் தெரிந்து கொண்டோம்.

மேலும், தாய்மொழியில் நிறைய சொற்களைத் தெரிந்து வைத்திருப்போர்க்குக் கல்விப்பயிற்சி மிகவும் எளிமையானதாக அமையும் என்பதையும் புரிந்து கொண்டோம்.

**அந்தோணி:** அதுமட்டுமா? ஒரு மொழியின் சொல்வளங்காட்டும் கண்ணாடியே அகராதி என்பதையும் உணர்ந்துகொண்டோம்.

**அப்துல்லா:** நாங்கள் ஒரு சொல்லுக்கான பொருளைத்தான் தேடி வந்தோம். ஆனால், ஒரு கட்டுரை எழுதுவதற்குரிய முழுமையான செய்திகளைப் பெற்றுள்ளோம். அகராதியே! உன்னுடன் கலந்துரையாடியதை எண்ணி, நாங்கள் மிகவும் மகிழ்கிறோம். நன்றி வணக்கம்.

**அகராதி:** நானும் மகிழ்கிறேன். நன்றி. மீண்டும் சந்திப்போம்.

| **அகராதி வகைகள்** | |
|---|---|
| சிறுவர்க்கான அகராதிகள் | வணிகச் சொல் அகராதிகள் |
| எதுகை மோனை அகராதிகள் | கணினிச் சொல் அகராதிகள் |

| | |
|---|---|
| மரபுத்தொடர் அகராதிகள் | மருத்துவச் சொல் அகராதிகள் |
| வட்டாரவழக்கு அகராதிகள் | அலுவலகப் பயன்பாட்டுச் சொல் அகராதிகள் |
| கலைச்சொல் அகராதிகள் | ஆட்சிமொழி அகராதிகள் |
| பழமொழி அகராதிகள் | இணைய அகராதிகள் |
| மேற்கோள் அகராதிகள் | பொறியியற் சொற்சார்ந்த அகராதிகள் |
| ஒரு பொருட் பன்மொழி அகராதிகள் | தத்துவம்சார் அகராதிகள் |
| எதிர்ச்சொல் அகராதிகள் | சமயக் கருத்துசார்ந்த அகராதிகள் |
| ஒலிக்குறிப்பு அகராதிகள் | இலக்கியவியல் சார்ந்த அகராதிகள் |
| ஒலிப்பு அகராதிகள் | அயற்சொல் அகராதிகள் |

| **அகராதிகள்** | **நிகண்டுகள்** |
|---|---|
| சதுரகராதி – வீரமாமுனிவர் | திவாகரம் – திவாகரர் |
| தமிழ் – ஆங்கில அகராதி – பெப்ரீஷியஸ் | பிங்கல நிகண்டு – பிங்கலர் |
| பட அகராதி – இராமநாதன் | சூடாமணிநிகண்டு – மண்டல புருடர் |
| தமிழ்ச்சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதி – ஞானப்பிரகாச அடிகள் | அகராதி நிகண்டு – சிதம்பர ரேவண சித்தர் |
| திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி – | கயாதர நிகண்டு – கயாதரர் |

| | |
|---|---|
| பரோ, எமினோ | |
| பழமொழி அகராதி – பெர்சிவல் | உரிச்சொல் நிகண்டு – காங்கேயர் |

**பெயர்ச்சொல்**

**தொழிற்பெயர்**

மாதவி ஆடல்கண்டு கோவலன் மகிழ்ந்தான்.

இத்தொடரில் உள்ள பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், தொழிற்பெயர்களை அறிவோம்.

மாதவி, கோவலன் - இவை பெயர்ச்சொற்கள்

கண்டு, மகிழ்ந்தான் - இவை வினைச்சொற்கள்

ஆடல் – என்பது தொழிற் பெயர்.

அறுவகைப் பெயர்ச்சொற்களுள் தொழிற்பெயரும் ஒன்று என்பதனை முன்வகுப்பிலேயே கற்றிருக்கிறீர்கள். ஆடல் - என்பது ஆடுதல் என்னும் தொழிலைக் குறிப்பதனால், அது தொழிற்பெயர் எனப்பட்டது.

ஆடு + அல் = ஆடல். அல் – என்பது தொழிற் பெயர் விகுதி. இவ்வாறு தொழிற்பெயரைக் குறிக்க வரும் விகுதிகள்: தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து, ஆல் என்பன.

வினைப்பகுதியோடு மேற்குறித்த விகுதிகளைச் சேர்த்தால் தொழிற்பெயராகும்.

| | |
|---|---|
| (எ.கா.) பெறுதல் = பெறு + தல் | கோடல் = கோடு + அல் |
| ஆட்டம் = ஆடு + அம் | கொலை = கொல் + ஐ |
| வாழ்க்கை = வாழ் + கை | பறவை = பற + வை |
| போக்கு = போ + கு | புளிப்பு = புளி + பு |

| | |
|---|---|
| வரவு = வர + உ | மறதி = மற + தி |
| உணர்ச்சி = உணர் + சி | புலவி = புல + வி |
| செய்யுள் = செய் + உள் | சாக்காடு = சா + காடு |
| கோட்பாடு = கோள் + பாடு | தோற்றரவு = தோற்று + அரவு |
| கேளானை = கேள் + ஆனை | நடவாமை = நட+ ஆ + மை |
| பாய்த்து = பாய் +து. | தாழால் = தாழ் + ஆல் |

**தொழிற்பெயர் வகைகள்**

தொழிற்பெயர் இருவகைப்படும்.

1. முதனிலைத் தொழிற்பெயர்
2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**1. முதனிலைத் தொழிற்பெயர்**

தொழிற்பெயர் விகுதிகளே இல்லாமல், பகுதி மட்டும் வந்து, தொழிலை உணர்த்துவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் எனப் பெயர்.

(எ.கா.) கபிலனுக்கு அடி விழுந்தது.

இத்தொடரில் அடி, என்பது விகுதிபெறாமல், பகுதியாய் நின்று தொழிலை உணர்த்துகிறது.

**2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

தொழிற்பெயரின் முதனிலையாகிய பகுதி திரிந்து வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

(எ.கா.) அறிவறிந்த மக்கட் பேறு.

அவனுக்கு என்ன கேடு?

இங்குப் 'பெறு', கெடு என்னும் முதனிலைகள் 'பேறு', 'கேடு' எனத் திரிந்து 'பெறுதல்', 'கெடுதல்' என்னும் பொருளை உணர்த்துகின்றன.

**வினையாலணையும் பெயர்**

முருகன் பரிசு பெற்றான்.

பரிசு பெற்றானைப் பாராட்டினர்.

இவ்விரு தொடரிலும், பெற்றான் என்னும் வினைச்சொல் வந்துள்ளது.

முதல் தொடரிலுள்ள பெற்றான் என்பது, முருகன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாக வந்துள்ளது.

இரண்டாவது தொடரில் உள்ள 'பெற்றானை' என்பது முருகனைக் குறிக்கும் பெயராக வந்துள்ளது.

இவ்வாறு வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினைசெய்தவரைக் குறிப்பது வினையாலணையும் பெயர் எனப்படும். இது வினைக்குரிய காலம் காட்டும்; பெயர்க்குரிய வேற்றுமை உருபுகளையும் பெற்று வரும்.

பெற்றானை - இறந்தகாலம்

பெறுகின்றானை - நிகழ்காலம்

பெறுவானை - எதிர்காலம்

பெற்றான் + ஐ என, இரண்டாம் வேற்றுமை உருபான ஐ ஏற்று வந்துள்ளமை காண்க.

**தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகள்**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| தொழிலுக்குப் பெயராய் வரும். | தொழில் செய்பவருக்குப் பெயராய் வரும். |
| படர்க்கை இடத்தில் வரும். | மூவிடங்களிலும் வரும். |
| காலங்காட்டாது. | முக்காலத்தையும் காட்டும். |

### பண்புப் பெயர்

பண்பை உணர்த்தும் பெயர் பண்புப் பெயர். அறுவகைப் பெயருள் ஒன்றான பண்புப் பெயர் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

1. செம்மை, வெண்மை, கருமை – நிறப்பண்பு
2. வட்டம், சதுரம், கூம்பு, செவ்வகம் – வடிவப்பண்பு
3. ஒன்று, அரை, கிலோமீட்டர் – அளவுப்பண்பு
4. காரம், புளிப்பு, இனிப்பு – சுவைப்பண்பு

### பண்புப் பெயர் விகுதிகள்

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், அர், பம், து என்பன பண்புப்பெயர் விகுதிகள்.

| | |
|---|---|
| (எ.கா.)நன்மை = நல் + மை | நன்றி = நல் + றி |
| தொல்லை = தொல் + ஐ | நன்று = நல் + று |
| மாட்சி = மாண் + சி | நலம் = நல் + அம் |
| மாண்பு = மாண் + பு | நன்னர் = நல் + அர் |
| மழவு = மழ + உ | திட்பம் = திண் + பம் |
| நன்கு = நல் + கு | தீது = தீமை + து |

### சொல்

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும். பதம், மொழி, கிளவி என்பன ஒரு பொருள்தரும் பல சொற்கள்.

| |
|---|
| பதம் – பகுபதம் (பகுக்கவியலும் பதம்); பகாப்பதம் (பகுக்கவியலாப் பதம்) |
| மொழி – தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி |
| கிளவி – இரட்டைக்கிளவி (இரட்டைச்சொல் |

(எ-டு)

1. பூ, கை, தா, வா – இவை ஓரெழுத்துச் சொற்கள்.
2. மண், மாந்தர், நடந்தனர் – இவை இரண்டு முதலாகப் பல எழுத்துகள் தொடர்ந்த சொற்கள்.

**மூவகை மொழிகள்**

மொழி தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும்.

1. **தனிமொழி**

ஒரு சொல் தனித்து நின்று பொருளை உணர்த்துவது, தனிமொழி. (எ-டு) வா, கண், செய்தான்.

2. **தொடர்மொழி**

இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட சொற்கள் தொடர்ந்துவந்து பொருளை உணர்த்துவது தொடர்மொழி.

(எ-டு)

1. படம் பார்த்தான்.
2. பசுவும் கன்றும் தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருக்கின்றன.

3. **பொதுமொழி**

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிற சொற்களுடன் தொடர்ந்துநின்று வேறு பொருளையும் தந்து, தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது, பொதுமொழி.

(எ-டு) அந்தமான்

'அந்தமான்' என்பது ஒரு தீவையும், அச்சொல்லே அந்த + மான் எனப் பிரிந்து நின்று, அந்த மான் (விலங்கு) என வேறுபொருளையும் தருகின்றது.

இதேபோல், பலகை, வைகை, தாமரை, வேங்கை முதலியன தனிமொழியாகவும் பொதுமொழியாகவும் வருவதை அறிக.

ஒருமொழி ஒருபொருள னவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன.

- நன்னூல், 260

**வினைச்சொல்**

இராமன் வந்தான். கண்ணன் நடந்தான்.

இத்தொடர்களில் இராமன், கண்ணன் என்பன பெயர்ச்சொற்கள். அவையே எழுவாய்களாகவும் உள்ளன. வந்தான், நடந்தான் ஆகிய சொற்கள் வருவதும், நடப்பதும் ஆகிய செயல்களைக் குறிப்பதால், இவை வினைச்சொற்கள். இவையே பயனிலைகளாகவும் (முடிக்கும் சொற்களாகவும்) உள்ளன. இவ்வாறு, எழுவாய் செய்யும் செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள்.

**வினைமுற்று**

அருளரசு வந்தான். வளவன் நடந்தான்.

இத்தொடர்களில் வந்தான், நடந்தான் என்னும் வினைச்சொற்களின் பொருள் முற்றுப்பெற்று வந்துள்ளன. இவ்வாறு, தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை வினைமுற்றுகள் என்பர். இது முற்றுவினை எனவும் வழங்கப்படும்.

| |
|---|
| ‘வந்தான், நடந்தான்’ என்னும் வினைமுற்றுகள் ’ஆன்’ என்னும் விகுதி பெற்றுள்ளதால், உயர்திணையையும், ஆண்பாலையும், ஒருமை என்ற எண்ணையும், படர்க்கை இடத்தையும், உணர்த்துகின்றன. ’த்’ என்ற இடைநிலை வந்துள்ளதால் ( நட + த் (ந்) + த் + ஆன்); (வா (வ) + த் (ந்) + த் + ஆன்) இஃது இறந்த காலத்தையும் உணர்த்துகிறது. |

வினைமுற்று எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும்; முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும்; திணை, பால், எண், இடங்களைக் காட்டும். இவ்வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

**தெரிநிலை வினைமுற்று**

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினைமுற்று.

(எ-டு) உழுதான்

| | | |
|---|---|---|
| செய்பவன் | - | உழவன் |
| கருவி | - | கலப்பை |
| நிலம் | - | வயல் |
| செயல் | - | உழுதல் |
| காலம் | - | இறந்தகாலம் |
| செய்பொருள் | - | நெல் |

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே.

- நன்னூல், 320

**குறிப்பு வினைமுற்று**

பொருள்முதல் ஆறனையும் அடிப்படையாகக்கொண்டு, முன் சொல்லப்பட்ட செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அவன் பொன்னன் | - | பொன்னை உடையவன் | - | பொருள் |
| அவன் விழுப்புரத்தான் | - | விழுப்புரத்தில் வாழ்பவன் | - | இடம் |
| அவன் சித்திரையான் | - | சித்திரையில் பிறந்தவன் | - | காலம் |
| அவன் கண்ணன் | - | கண்களை உடையவன் | - | சினை |

| | | | | |
|---|---|---|---|---|
| அவன் நல்லன் | - | நல்ல இயல்புகளை உடையவன் | - | குணம் |
| அவன் உழவன் | - | உழுதலைச் செய்பவன் | - | தொழில் |

பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

- நன்னூல், 321

அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த 'பொன்னன்' என்பதே குறிப்பு வினை ஆகும். பொன்னை உடையவனாய் இருந்தான், இருக்கின்றான், இருப்பான் எனப் பொன்னன் என்பது முக்காலத்தையும் குறிப்பாக உணர்த்துகிறது.

**எச்சம்**

கயல்விழி படித்தாள். கோதை சென்றாள்.

இத்தொடர்களில் படித்தாள், சென்றாள் என்பன வினைமுற்றுகள்.

இவ்வினைமுற்றுகள் சில இடங்களில் 'ஆள்' என்னும் விகுதி குறைந்து படித்த, சென்ற எனவும், படித்து, சென்று எனவும் வரும். இச்சொற்கள் பொருளில் முற்றுப்பெறாத முழுமையடையாத வினைச்சொற்கள்; ஆதலால், எச்சம் எனப்படும்; அல்லது வினைமுற்றின் (ஆள்) விகுதி குறைந்து நிற்கும் சொல்லே எச்சம் எனப்படும்.

**பெயரெச்சம்**

படித்த கயல்விழி. சென்ற கோதை.

படித்த, சென்ற என்னும் முற்றுப்பெறாத எச்சவினைகள் கயல்விழி, கோதை எனப் பெயரைக்கொண்டு முடிந்ததால் அவை பெயரெச்சங்கள் எனப்படும். அஃதாவது, ஓர் எச்சவினை ( வந்த, நடந்த ) பெயரைக்கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும். இப்பெயரெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகாலப் பெயரெச்சம் - படித்த கயல்விழி, சென்ற கோதை
2. நிகழ்காலப் பெயரெச்சம் - படிக்கின்ற கயல்விழி, செல்கின்ற கோதை
3. எதிர்காலப் பெயரெச்சம் - படிக்கும் கயல்விழி, செல்லும் கோதை

இது தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

**தெரிநிலைப் பெயரெச்சம்**

வந்த பையனைப் பார்த்துக் கண்ணன் நின்றான்.

இத்தொடரில் வந்த என்பது பையன் என்னும் பெயரைக்கொண்டு முடிவதால், பெயரெச்சம் எனப்படும். செய்த, செய்கின்ற, செய்யும் என்பன முறையே முக்காலத்திற்கும் உரிய பெயரெச்ச வாய்பாடுகள். இவை முக்காலத்தையும் செயலையும் வெளிப்படையாகக் காட்டிச் செய்பவன் முதலான ஆறும் எஞ்சி நிற்கும். இவை உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

(எ-டு) உண்ட இளங்கோவன்.

| | | |
|---|---|---|
| செய்பவன் | - | இளங்கோவன் |
| கருவி | - | கலம் |
| நிலம் | - | வீடு |
| செயல் | - | உண்ணுதல் |
| காலம் | - | இறந்த காலம் |
| செய்பொருள் | - | சோறு |

உண்கின்ற இளங்கோவன், உண்ணும் இளங்கோவன் என நிகழ்காலம், எதிர்காலம் காட்டும் பெயரெச்சங்களையும் மேற்கண்டவாறே பொருத்திக் காணலாம்.

| | | |
|---|---|---|
| | உடன்பாடு | - | எதிர்மறை |
| (எ-டு) | உண்ட இளங்கோவன் | - | உண்ணாத இளங்கோவன் |

**குறிப்புப் பெயரெச்சம்**

காலத்தையோ செயலையோ உணர்த்தாமல் பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சம், குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

(எ-டு) நல்ல பையன்

இத்தொடரில் நல்ல என்னும் சொல் காலத்தையோ செயலையோ உணர்த்தாமல், பண்பினை மட்டும் உணர்த்தி நின்று, பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிந்துள்ளது. இது காலத்தைக் (இன்று நல்ல பையன், நேற்று நல்ல பையன், நாளை நல்ல பையன்) குறிப்பால் உணர்த்தும்.

| | | |
|---|---|---|
| | உடன்பாடு - | எதிர்மறை |
| (எ-டு) | நல்ல மாணவன் - | தீய மாணவன் |

**வினையெச்சம்**

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும்.

(எ-டு) படித்து வந்தான், பாடக் கேட்டான், ஓடிச் சென்றான், போய்ப் பார்த்தான்.

அஃதாவது, ஓர் எச்சவினை, வினையைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகால வினையெச்சம் - படித்து வந்தான், ஓடிச் சென்றான்.
2. நிகழ்கால வினையெச்சம் - படித்துவருகின்றான், ஓடிச் செல்கின்றான்.
3. எதிர்கால வினையெச்சம் - படித்து வருவான், ஓடிச் செல்வான்.

இவ்வினையெச்சமும் தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும். பெயரெச்சத்தில் எச்சங்கள் மட்டுமே செய்த, செய்கின்ற, செய்யும் எனக் காலத்துக்கேற்ப மாறும்; பெயர்கள் மாறா. வினையெச்சத்தில் எச்சங்கள் மாறா.

மேலே காட்டியதுபோல அவை முக்கால வினைமுற்றுகளையும் பெற்றுவரும்.

**தெரிநிலை வினையெச்சம்**

படித்துத் தேறினான் படிக்கச் செல்கின்றான்

இத்தொடர்களில் படித்து, படிக்க என்னும் சொற்கள் எச்ச வினையாய் நின்று காலத்தைக் காட்டித் தேறினான், செல்கின்றான் ஆகிய வினைமுற்றுகளைக் கொண்டு பொருள் முடிவு பெறுகின்றன. இவ்வாறு காலத்தையும், செயலையும் உணர்த்தி

வினைமுற்றைக் கொண்டு முடியும் எச்சவினை, தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

**குறிப்பு வினையெச்சம்**

மெல்லப் பேசினான். கண்ணன் நோயின்றி வாழ்ந்தான்.

இவ்விரு தொடர்களிலும் உள்ள மெல்ல, இன்றி என்னும் எச்ச வினைச்சொற்கள் காலத்தை வெளிப்படையாக உணர்த்தாமல், பண்பினை உணர்த்தி நின்று, வினைமுற்றைக்கொண்டு முடிந்துள்ளன. ஆகையால், இவை குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

**முற்றெச்சம்**

மைதிலி வந்தனள் பாடினள். முருகன் படித்தனன் தேறினன்.

இத்தொடர்களில், வந்தனள், படித்தனன் என்னும் வினைமுற்றுகள் வந்து, படித்து என்னும் வினையெச்சப் பொருள்களில் நின்று, வேறு வினைமுற்றுகளைக் கொண்டு முடிந்துள்ளன. இவ்வாறு ஒரு வினைமுற்றுச் சொல், எச்சப்பொருளில் வந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவதே முற்றெச்சம் எனப்படும்.